# "சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் தாக்கமதிப்பீடு" (மாதகல் கிழக்குப்பகுதியைச் சிறப்பாகக் கொண்டது)

க. பாலச்சந்திரன்[1*] மற்றும் பி. விபுலன்[2]

பாதுகாப்பான குடிநீர் மற்றும் அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வது ஒவ்வொரு தனி மனிதனினதும் உரிமையாகும். இலங்கையில் 85 சதவீதமான மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற போதிலும் நகரப் பகுதிகளுடன் ஒப்பிடும் போது கிராமப் பகுதிகள் பாதுகாப்பான குடிநீர் மற்றும் அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பெறுவதில் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றினைப் பெற்றுக் கொள்வதில் உள்ள குறைபாடுகள் மக்களின் சுகாதாரம், உடல்நலம் மற்றும் வருமான ஈட்டத்தில் நேரடியான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியனவாகும்.இலங்கை அரசாங்கம் 2025 களில் 100 சதவீதமான மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்குவதனூடாக மிலேனியம் அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்ளும் நோக்கில் கடந்த மூன்று தசாப்தங்களாக நாடளாவிய ரீதியில் சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர்வழங்கல் திட்டங்களை வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவற்றில் பல திட்டங்கள் நிலைத்திருக்கும் தன்மை கொண்டதாக உள்ள போதிலும் சில திட்டங்கள் கட்டுமாணப் பணிகளில் சமூகப் பங்குபற்றல் கிடைக்கப் பெற்றாலும் செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் கட்டங்களில் சமூகப் பங்குபற்றல் கிடைக்காமையினால் பல பிரச்சனைகளை எதிர்கொண்டு ஐந்து வருடத்துக்கு உட்பட்ட காலப் பகுதிக்குள்ளேயே இடைநடுவில் கைவிடப்படுகின்றன. இந்நிலையில் மாதகல் கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூகமயப் படுத்தப்பட்ட கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள சாதக மற்றும் பாதக தாக்கங்களை மதிப்பிடும் நோக்கிலும் கிராமிய நீர்வழங்கலினை நிர்வகிப்பதில் சமூக மட்ட அமைப்புக்கள் கொண்டுள்ள செயற்றிறனை மதிப்பிடும் நோக்கிலும் தாக்க மதிப்பீடு பற்றிய இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கு முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதனிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல் மூலம் சேகரிக்கப்பட்டதுடன் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பச் சபையின் கையேடுகள், வலிதென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் புள்ளி விபர

[1] புவியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.
cavicavitha@gmail.com
[2] புவியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

கைநூால் ,மாதகல் கிழக்கு நீர்ப் பாவனையாளர் சங்கத்தின் அறிக்கையிலிருந்து பெறப்பட்டுள்ளது. விபரணப் புள்ளிவிபரவியல் மற்றும் SWOT பகுப்பாய்வு நுட்பங்கள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்தினூடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் MS-Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து ஆய்வுப் பகுதியில் பௌதீக, சமூக, பொருளாதார, நிறுவன ரீதியில் பல சாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதுடன் கிராமிய நீர்வழங்கலை நிர்வகிப்பதற்கேற்ப சமூகமட்ட அமைப்புக்கள் செயற்றிறனைக் கொண்டுள்ளன என்பதும் ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான சில பரிந்துரைகளும் இவ்வாய்வின் முடிவில் முன்மொழியப்பட்டுள்ளன.

*திறவுச்சொற்கள்: சமூகமயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள், சமூகப் பங்குபற்றல், கிராமிய நீர்விநியோகம்*